Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 356 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.11**

Defence

Court

| | |
|---|---|
| Name | திரு. சத்தியராஜ் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 17th day of February 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 17th day of February 2026.**

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் தற்போது சேலம் மாவட்டம் ஆத்தூர் உட்கோட்ட காவல் துறை துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2021 ல் பண்ருட்டியில் பயிற்சி துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்த போது காடாம்புலியுர் காவல் நிலைய குற்ற எண் 561/2021 இதச 302 வழக்கை காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் அடிப்படையில் எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அதிகாலை 5.45 மணிக்கு புலன்விசாரணை மேற்கொண்டும் சம்பவயிடமான புதுப்பாளையம் கிராமத்தில் இறந்து போன ஜெகதீசன் என்பவர் வீட்டிற்கு சென்று சாட்சிகள் ரமேஷ் மற்றும் ரவிச்சந்திரன் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். **நான் தயார் செய்த மாதிரி வரைப்படம் அதசாஆ 15 ஆகும். பார்வை மகஜர் ஏற்கனவே அதசாஆ 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** பிறகு சம்பவயிடத்தில் இருந்த தடயங்கள்

1. இரத்தக்கறை படிந்த சிமெண்ட் தரை சிறிதளவு.

2. இரத்தக்கறை படியாத சிமெண்ட் தரை சிறிதளவு

3. இரத்தக்கறை படிந்த ரோஸ் கலர் நீலம், பச்சை கலர்களில் பூ போட்ட தலையணை உறை ஒன்று.

4. இரக்கக்கறை படிந்த நீலம் மற்றும் கருப்பு , மஞ்சள் நிற பூ போட்ட தலையணை உறை ஒன்று.

5. இரத்தக்கறை படிந்த வெள்ளை கலர் சால்வை ஒன்று.

6. இரத்தக்கறை படிந்த 65 xcm நீளம் உள்ள மரக்கைபிடியும் சுமார் 18 cm நீளமும் 2 xcm அகலமும் கொண்ட இரும்பு பாகம் கொண்ட மண்வெட்டி ஒன்று.

7. இரத்தக்கறை படிந்த 70cm நீளம் உள்ள மரக்கைபிடி சுமார் 8 cm அகலும் கொண்ட இரும்பு பகுதி கொண்ட கோடாரி

இவைகளை அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 6.45 மணிக்கு மகஜரில் கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ 16 ஆகும். மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்கள் சான்று பொருள் 6 முதல் 12 ஆகும்.** பிறகு சம்பவயிடத்தில் இருந்த சாட்சிகள் சரவணன், சாந்தி, ரமேஷ், ரவிச்சந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு விழுப்புரம் அரசு மருத்துவமணைக்கு சவகிடங்கில் காலை 9.00 மணிக்கு சென்று கொலையுண்டு இறந்து போன ஜெகதீசன் என்பவர் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை சாட்சிகள் முருகன், சோமசுந்தரம், ரமேஷ், கிருஷ்ணமூர்த்தி, வெங்சடேசன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். **நான் தயாரித்த பிரேத விசாரணை அறிக்கை அதசாஆ 17 ஆகும்.** பிறகு

பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த தலைமைக்காவலர் திரு. ராசு என்பவர் வசம் காலை 11.10 மணிக்கு தக்க அறிவுரைகள் வழங்கி ஒப்புவிக்கப்பட்டது. இவ்வழக்கில் அனைத்து தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ததில் ஜெகதீசனை எதிரிகள் நதியா மற்றும் கோவிந்தராசு இருவரும் சேர்ந்து கோடாரி, மண்வெட்டியால் மாறி மாறி தாக்கி கொலை செய்த சம்பவம் உண்மை என தெரிய வந்தது. அதன்பிறகு எதிரிகளை தேடி செல்லும் போது கிடைத்த ரகசிய தகவலின் படி கீழ்மாம்பட்டு பேருந்து நிறுத்தம் அருகே நின்றுக்கொண்டிருந்த எதிரிகள் 1. நதியா, 2. கோவிந்தராசு இருவரையும் பிடித்து விசாரிக்க எதிரிகள் இருவரும் கொலை செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டதால் 16.00 மணிக்கு கைது செய்தும், பிறகு தகவல் சொல்லி வரவழைக்கப்பட்ட சாட்சிகள் பழனிசாமி, கிராம நிர்வாக அதிகாரி மற்றும் கிராம உதவியாளர் தேவி இருவர் முன்னிலையில் அதே இடத்தில் நதியா சொன்ன ஒப்புதல்வாக்குமூலத்தை இருவர் முன்னிலையில் 16.15 மணிக்கு பதிவு செய்தும், தொடர்ந்து எதிரிகளையும் மேற்படி சாட்சிகளையும் அழைத்துக்கொண்டு 1வது எதிரி நதியா அவரது தோட்டத்திற்கு 18.00 மணிக்கு அழைத்து சென்று 2வது எதிரி கோவிந்தராசுவுடன் சேர்ந்து அவரது கணவரை கொலை செய்த போது ஏற்பட்ட இரத்தக்கறை படிந்த 1. ஒரு பகுதி எரிந்தும் , எரியாத நிலையில் உள்ள இரத்தக்கறை படிந்த வெள்ளை நிற அரைக்கை சட்டை ஒன்று அதில் மணிராஜ் 38 cm Magestic white என்ற sticker உள்ளது.

2. ஒரு பகுதி எரிந்தும், எரியாத நிலையில் உள்ள இரத்தக்கறை படிந்த மஞ்சள் நிற கரைபோட்ட வெள்ளை நிற 4 முழம் வெட்டி ஒன்று.

3. ஒரு பகுதி எரிந்தும், எரியாத நிலையில் உள்ள இரத்தக்கறை படிந்த ரோஸ், காப்பி கலர், மஞ்சள் நிற கொண்ட பாவாடை ஒன்று.

4. எரிந்த நிலையில் உள்ள துணியும் சாம்பல் சிறிதளவு ஆகிய தடயங்களை மறைத்து வைத்திருந்த 1வது எதிரி எடுத்து ஆஜர் செய்தததை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றியும் அதன்பிறகு 1வது எதிரி நதியா அவரது வீட்டிற்கு அழைத்து சென்று வீட்டின் அறையில் கொ லை செய்ய பயன்படுத்திய சமார் 150cm நீளமுள்ள வெளிர் சிவப்பு நிற நைலான் கயிறு ஒன்று மறைத்து வைத்திருந்த, எடுத்து ஆஜர் செய்தததை 18.20 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் தனி மகஜரில் கைப்பற்றப்பட்டு பிறகு எதிரிகள் மற்றும் தடயங்களுடன் நிலையம் வந்து பிறகு எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அதன்பிறகு பிரேத பரிசோதனி மீது தலைமைக்காவலர் ராசு என்பவர் பி ரேதத்தின் மீது இருந்த

1. சிமெண்ட் நிறத்தில் வெள்ளை நிற கரை போடு போட்ட வெட்டி ஒன்று.

2. வெளிர் காவி நிறத்தில் கருப்பு நிற கட்டம் போட்ட முழுக்கை சட்டை ஒன்று அதில் OPEN Fashion clothing - M என்ற எழுத்துள்ளதை காவல் நிலையத்தில் கொண்டு வந்து ஆஜர் செய்ததை படிவம் 95 கைப்பற்றினேன். மேற்படி வழக்கை தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு கடந்த 23.09.2021 ஆம் தேதி கிருஷ்ணமூர்த்தி

என்பவரை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பிறகு சாட்சிகள் ரங்கசாமி, சின்னதுரை, ஜெயமுருகன், தேவநாதன், பெருமாள், லட்சுமிதேவி மற்றும் பழனிவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட அனைத்து தடயங்களையும் இரசயான பரிசோதனைக்கு விழுப்புரம் தடய அறிவியல் ஆய்வு கூடத்திற்கு மற்றும் சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி, அதன் அறிக்கைகளை பெறப்பட்டது. **பிரேத பரிசோதனையின் போது எடுக்கப்பட்ட இறந்த ஜெகதீசன் இரத்தமாதிரி அனுப்பப்பட்டு O வகை இரத்தவகை என்று அறிக்கை பெறப்பட்டது. அந்த அதசாஆ 18 ஆகும். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்கள் இரத்தமாதிரி அறிக்கை மற்றும் தடய அறிவியல் அறிக்கை முறையே அதசாஆ 19 மற்றும் அதசாஆ 20 ஆகும்.** தடய அறிவியல் அறிக்கைக்காக அனுப்பப்பட்ட இரத்தக்கறை படிந்த ரோஸ், காப்பி கலர், மஞ்சள் நிற கொண்ட பாவாடையில் **பகுதி எரியப்பட்ட பிங்க் நிற டாப்ஸ் மற்றும் இரண்டு துண்டுகள் எரிக்கப்பட்ட சிகப்பு நிற பிளவுஸ் துண்டுகள் குறித்தும் மேற்படி அதசாஆ 20 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக விழுப்புரம் பகுப்பாய்வு தடய அறிவியல் lab இருந்து அளிக்கப்பட்ட விளக்க அறிக்கை அதசாஆ 21 ஆகும்.** அதனை தொடர்ந்து பிரேத பரிசோதனை செய்த மருத்துவ அலுவலரிடம் இறப்பின் காரணம் குறித்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் இறுதி

கருத்துரை பெற்று புலன்விசாணை நிறைவு செய்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 302 இதசப்படி கடந்த 24.02.2021 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் கிருஷ்ணமூர்த்தி, சரவணன் மற்றும் ரவிசந்திரன் ஆகியோர் நான் பதிவு செய்து இருந்த குவிமுச 161 வாக்குமூலத்தில் உள்ளவாறே சாட்சியம் அளித்தார்கள்.

**2வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

18.09.2021 அன்று இரவு 10.30 மணியளவில் எனது விசாரணையை தொடங்கினேன். பூவராகவன் உதவி ஆய்வாளர் பதிவு செய்து இருந்த முதல் தகவல் அறிக்கையை காடாம்புலியூர் காவல் நிலைய பொறுப்பு நிலைய அதிகாரியாக இருந்த வகையில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். காடாம்புலியூர் காவல் நிலையத்தில் பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையை பெற்றுக்கொண்டேன். காடாம்புலியூர் காவல் நிலையத்தில் இருந்து சம்பவயிடம் சுமார் 8-ல் இருந்து 10 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சம்பவ தினமான 18.09.2021 அன்று நான் சம்பவயிடம் செல்லவில்லை. சம்பவயிடத்தில் இருந்து பிரேதத்தை அ.சா. 1 முருகன் ( இறந்தவரின் சித்தப்பா) மருத்துவமணைக்கு எடுத்து சென்றார். ஆம்புலன்ஸ்சில் எடுத்து சென்றார். 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து அவர்கள் பரிசோதித்து இறந்துவிட்டார் என்று சொன்ன பிறகு தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக அ.சா.1 முருகன் மருத்துவமணைக்கு பிரேதத்தை எடுத்து சென்றார்.

சம்பவயிடத்திற்கு உறவினர்கள் மாலை 5.30 மணிக்கு சென்று பிறகு சுமார் 45 நிமிடங்கள் கழித்து 108ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டது. 108 ஆம்புலன்ஸ் வந்து போன பிறகு தனியார் ஆம்புலன்ஸ் வந்ததது. எனக்கு எனது விசாரணையில் சரியான நேரம் தெரிய வரவில்லை. அந்த நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்து போன விவரம் எனக்கு தெரியாது. காடாம்புலியுர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பூவராகவன் அவர்களுக்கு தெரியுமா என்று எனக்கு தெரியாது. சம்பவயிடமான வீட்டிற்கு நான் மறுநாள் சென்ற போது வீடு திறந்து கிடந்தது. யாரும் அங்கு இல்லை. எனது விசாரணையில் வீட்டிற்கு 18.09.2021 மாலை 5.30 மணியில் இருந்து நான் செல்லும் வரை யாரும் சென்றதாக தெரியவில்லை. உதவி ஆய்வாளரை விசாரித்து இந்த விவரத்தை தெரிந்துக்கொண்டேன். வீட்டை நான் முழுவதுமாக சோதனை செய்தேன். தோட்டத்தை நான் பார்வையிடவில்லை. சம்பவயிடமான வீடு வடக்கு தெற்கு சாலையில் கிழக்கு பக்கமாக அமைந்துள்ளது. சாலையில் இருந்து 60 அடி கிழக்கே வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். பட்டாபி உணவகம் சம்பவ வீட்டிற்கு பின்பக்கம் அதாவது கிழக்கு பக்கம் உள்ளது. அந்த உணவகம் அமைந்துள்ள தெரு பெயர் எனக்கு தெரியவில்லை. அ ந்த உணவகம் அமைந்துள்ள திசை எனக்கு தெரியாது. பட்டாபி உணவகம் எங்கே அமைந்துள்ளது என்ற விவரம் வழக்கு கோப்பில் குறிப்பு எதுவும் இல்லை. தெற்கு பக்கம் உள்ள சிமெண்ட் ரோடு மற்றும் சம்பவம் வீட்டிற்கு இடையே கிருஷ்ணமூர்த்தியின் மாட்டு கொட்டகை,

பாத்ரூம் கட்டிடம், மெட்டை மாடிவீடு உள்ளது என்றால் சரிதான். பட்டாபி உணவகத்தை நடத்தும் உரிமையாளரை நான் விசாரிக்க வில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா. 5 சின்னத்துரை அழகப்ப சமுத்திரத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் 2வது எதிரி சம்பவ வீட்டிற்கு பின்பக்கம் போனதை பார்த்ததாக எவ்வாறு நான் தெரிந்துக்கொண்டேன் என்றால் ஊர்மக்களை விசாரித்த போது தெரிந்துக்கொணடேன். குறிப்பிட்டு யார் என்று சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் விசாரித்த சம்பவயிட சாட்சிகள் யாரும் சின்னத்துரையை பட்டாபி உணவகத்தில் பார்த்ததாக என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். சின்னதுரையை காடாம்புலியூர் காவல் நிலையத்தில் விசாரித்தேன். நான் அவரை அழைத்து விசாரித்தேன். சின்னத்துரையை காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரித்தேன் என்று சொல்லுவது தவறு என்றாலும் அவரை வீட்டில் வைத்து விசாரித்தேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா. 1 முருகனின் மகன் வாசுதேவனுக்கு சம்பவம் பற்றிய தகவல் இறந்த ஜெகதீசனின் மகன் சரவணன் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வாசுதேவன் இந்த வழக்கில் சாட்சி கிடையாது என்றால் சரிதான். சரவணன் எந்த கைபேசியில் இருந்து வாசுதேவனின் எந்த கைபேசிக்கு பேசினார்கள் என்று நான் விசாரிக்கவில்லை. 18.09.2021 மாலை சம்பவம் நடந்ததாக நான் சொல்லுவது தவறு என்றாலும் அவர் எங்கே எப்போது அடிப்பட்டார் என்று நான் விசாரித்து தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

19.09.2021 மாலை 4.00 மணிக்கு எதிரிகள் இருவரும் கீழ்மாம்பட்டு பேருந்து நிலையத்தில் இருப்பதாக இரகசிய தகவல் வந்தது. அந்த நேரத்தில் நான் எங்கே இருந்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் எங்கு இருந்தேன் என்று குறிப்பு எதுவும் வழக்கு கோப்பில் எழுதவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்ததாக சொல்லுவது தவறு என்றாலும் எதிரிகள் இருவரையும் முதல் நாளே அதாவது 18.09.2021 அன்றே காவல் நிலையம் வரவழைத்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. முதல் எதிரி என்னிடம் தாமாக முன் வந்து எந்த ஒப்புதல்வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் நான் எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட பொருட்கள் 9 நாட்கள் கால தாமதமாக நீதிமன்றம் அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். குறிப்பிட்டு தாமதத்திற்கான காரணம் எதுவும் இல்லை. சான்று பொருட்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றாலும் அதன் காரணமாகத் தான் காலதாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றுசொன்னால் சரியல்ல. 18.09.2021 அன்று மாலை 5.30 மணிக்கு நானும் மற்ற போலிசாரும் சம்பவ வீட்டிற்கு சென்று விட்டோம் என்றாலும் நாங்கள் தான் முண்டியம்பாக்கம் மருத்துவமணைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக ஜெகதீசன் பிரேதத்தை அனுப்பி வைத்தோம் என்றால் சரியல்ல. அ.சா. 5 சின்னதுரை எனது விசாரணையில் சிலம்பிநாதன்பேட்டையில் உள்ள குவாரியில் பணிபுரிந்து

வருவதாக சொல்லவில்லை. அ.சா.5 சின்னதுரை எனது விசாரணையில் காலையில் டிபன் வாங்கி சென்று விட்டு மீண்டும் லாரிக்காரர்கள் வந்ததால் டிபன் மீண்டும் தேவைப்பட்டது என்றும் அதனால் மீண்டும் டிபன் வாங்க வந்ததாக கூறவில்லை. அ.சா. 5 சின்னதுரை எனது விசாரணையில் " நான் வந்த போது 5, 6 நபர்கள் சாப்பிட்டுக்கொண்டு இருந்தால் சிறிது நேரம் பிடிக்கும் என்றும் என்னை காத்து இருக்குமாறும் கூறினார்கள். நான் போன் பேசிக்கொண்டு வெளியில் நின்றுக்கொண்டு இருந்தேன். நான் நின்று இருந்த ஓட்டலை தாண்டி வண்டியில் சென்று முதல் எதிரி நதியாவின் வீட்டிற்குள் 2வது எதிரி கோவிந்தராசு சென்றார்" என கூறவில்லை. 1வது எதிரி கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை மடிக்கணினியில் தட்டச்சு செய்து pendrive-ல் காப்பி செய்து நிலையத்திற்கு வந்து பிரிண்ட் எடுத்தேன். அந்த pendrive-யை நான் சான்று பொருளாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 1வது எதிரி ஒப்புதல்வாக்குமூலம் எதுவும் நான் சொன்னது போல் கொடுக்கவில்லை என்பதால் தான் pendrive எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றாலும் அவரை தவறாக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அசா. 1 முருகன் மற்றும் சாட்சி சோமசுந்தரம் தவிர மற்ற சாட்சிகள் குறிப்பிட்டு அ.சா. 5 சின்னதுரையின் வாக்குமூலங்களை ஒரு வருட காலதாமதமாகத் தான் நீதிமன்றம் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். குறிப்பிட்டு

காலதாமததற்கான காரணம் எதுவும் இல்லை. சாட்சிகளின் வாக்குமூலங்கள் வழக்கிற்கு ஏற்றார் போல் நானாக தயாரித்துக் கொண்டவை அதன் காரணமாகத் தான் காலதாமதம் என்று சொன்னால் சரியல்ல.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(மேற்படி குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொண்டதாக வழக்கறிஞர் தெரிவித்தார்).

பிரேத விசாணையை நான் மருத்துவமணையில் மேற்கொண்டேன் என்றால் சரிதான். பிரேத விசாரணையை சம்பவயிடத்தில் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். 1வது எதிரியை சம்பவ தினத்தன்று காவல் நிலையம் வரவழைத்து அவரை எதிரியாக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றாலும் அவரை சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் நான் கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 1வது எதிரிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 1வது என்னிடம் எந்த ஒப்புதல்வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவரிடம் இருந்து எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*